DEREK PRINCE
MINISTRIES - INDIA

Free copy!



தேவனுடைய வார்த்தை உங்களுக்கு செய்வதென்ன ?

- பகுதி 3

“தேவனுடைய வார்த்தை உங்களுக்கு செய்வது என்ன” என்ற கருப்பொருளின் ஆய்வை நாம் தொடருகிறோம். இந்த மூன்றாம் பதிப்பில், கிறிஸ்துவில், நம்மை ஒரு புதிய வாழ்விற்குள் கொண்டு வருவதில் தேவனுடைய வார்த்தையின் பங்கை நாம் கவனிக்கப் போகிறோம். 6 பகுதிகள் கொண்ட இந்த தொடரின் முதல் பகுதி போதனையில், தேவனுடைய வார்த்தையின் விசித்திர தன்மையை குறித்து நாம் பார்த்தோம் - அது ஜீவனுள்ளது, கிரியை செய்கிறது, நம்முடைய வாழ்வை ஊடுருவிச் செல்கின்றது என்றோம். இரண்டாம் பகுதியில், அவ்வார்த்தை உங்கள் வாழ்வில் ஏற்படுத்தும் ஒரு குறிப்பிட்ட விளைவை குறித்துப் பேசினோம். அந்த விளைவு என்ன? விசுவாசம். விசுவாசம் எப்படி தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் வருகிறதென்றும், அதின் விளைவுகள் அநேக நேரங்களில் அற்புதங்களைச் செய்கிறதென்றும் பார்த்தோம்.

இரண்டாம் பகுதியில், இந்த “விசுவாசத்தின்" செயல் தொடரில், மூன்று தொடர் கட்டங்கள் இருப்பதை கண்டோம்: முதலாவது, நீங்கள் வசனத்தை உடையவர்களாய் இருக்க வேண்டும். இரண்டாவதாக, நீங்கள் வார்த்தையைக் கேட்க வேண்டும். மூன்றாவதாக, அதைக் கேட்கும் போது, அதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இத்தொடரின் மூலமாகவே, வார்த்தை உங்களுக்குள் விசுவாசத்தை பகிர்ந்தளிக்கிறது.

இந்த போதனை கடிதங்களில், நாம் பார்த்துக்கொண்டிருக்கும் தொடரின் மூன்றாவது பகுதியை நான் முன் வைக்கும் போது, இந்த செயல் தொடரை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும் என கேட்கிறேன். அப்படிச் செய்தால், உங்கள் வாழ்வில் ஏற்படும் விளைவு, விசுவாசம் ஆகும்.

இப்போதனைக்கு நீங்கள் திறந்த மனதுடன் செவி கொடுப்பீர்களானால், இன்றே விசுவாசம் உங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும். நான் இங்கு போதிக்கும் சத்தியங்களை, நீங்கள் உண்மையில் அனுபவிக்க ஆரம்பிப்பீர்கள்.

ஒரு அற்புதமான நிகழ்வு

“தேவனுடைய வார்த்தை உங்களுக்கு என்ன செய்யும்" என்ற தொடரின் இப்பதிப்பில், தேவனுடைய வார்த்தை, நமக்காக ஏற்படுத்தும் இரண்டாவது அற்புதமான விளைவை குறித்து நான் விவரிக்க உள்ளேன். அந்த அனுபவம் என்ன? புதிய பிறப்பு. நமது வாழ்வில், மற்றெந்த ஆவிக்குரிய அனுபவத்திலும், இது மிக முக்கியமானது. தேவனை நாம் அறிந்து, நமக்கு அவர் வைத்திருக்கும் சித்தத்தின் படி நாம் மாறப் போகிறோம் என்றால், இந்த அற்புதம் தான் முதன்மையானது.



"மறுப்பிறப்பு அடையாத எந்த நபருக்கும், தேவனுடைய இராஜ்யம் அடைக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய ராஜ்யத்தை தரிசிப்பதற்கும், அதினுள் பிரவேசிக்கவும் முதன்மையான நிபந்தனை புதிய பிறப்படைவதாகும்.."

அற்புதங்கள் என்ற கருத்தை நாம் கடந்த போதனை கடிதத்தில் அறிமுகம் செய்தோம். தேவதூதனின் செய்தியை கன்னி மரியாள் விசுவாசித்த போது நடந்த அற்புதத்தை நான் சுட்டி காட்டினேன். தேவதூதன் மூலமாக, தேவன் அனுப்பிய வார்த்தையை அவள் விசுவாசத்துடன் பெற்றுக்கொண்டாள் என்பதை நீங்கள் நினைவுகூறுவீர்கள். அவள் அதை அங்கிகரித்ததின் விளைவாக, அவளது விசுவாசம், அந்த வார்த்தையின் அற்புதம் செய்யும் வல்லமையைக் கட்டவிழ்த்தது.

தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளும் எந்த நபரின் வாழ்விலும் நடக்க கூடிய இன்னொரு அற்புதத்தை குறித்து தான் இந்த செய்தியில் பார்க்கப்போகிறோம். நான் புதிய பிறப்பை குறித்தே பேசுகிறேன் - மறு பிறப்பு அடைவது. தேவனுடைய வார்த்தை உங்கள் வாழ்வில் ஏற்படுத்தும் இரண்டாவது முக்கியமான விளைவு இதுதான். அது மட்டும் அல்ல, உங்கள் வாழ்விலோ, எனது வாழ்விலோ, நடக்க கூடிய மிக முக்கியமான அற்புதம் இதுவே.

புதிய பிறப்பை குறித்து, யோவான் 3:3ல் இயேசு சொல்வதை சற்று கேளுங்கள். யூத தலைவராகிய நிக்கொதேமுவுடன் அவர் பேசிக்கொண்டிருக்கிறார்.

> *இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார்.*

மறுப்பிறப்பு அடையாத எந்த நபருக்கும், தேவனுடைய இராஜ்யம் அடைக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய ராஜ்யத்தை தரிசிப்பதற்கும், அதினுள் பிரவேசிக்கவும் முதன்மையான நிபந்தனை புதிய பிறப்படைவதாகும். யோவான் 3:3ல் காணப்படும் அந்த நபராகிய நிக்கொதேமு, அந்த புதிய பிறப்பை புரிந்துக்கொள்ளவில்லை. "ஒரு மனிதன் எப்படி மறுபடியும் பிறக்க முடியும்?" என்று அவன் கேட்டான். இது மிக முக்கியமான கேள்வி: ஒரு நபர் எப்படி மறுபடியம் பிறக்க முடியும்?

இந்த போதனையில், மறு பிறப்பு எப்படி ஏற்படுகிறதென்று நான் விரிவாக இங்கு விவரிக்க விரும்புகிறேன். ஆனால் முதன் முதலில் தேவனுடைய வார்த்தையை கேட்பதின் விளைவாக இது எப்படி ஏற்படுகிறதென்று நான் உங்களுக்கு காண்பிக்கப் போகிறேன்.

தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தை

1 பேதுரு 1:22-23ல், இயேசு கிறிஸ்துவில் புதிதாக விசுவாசம் வைத்தவர்களுக்கு பேதுரு இந்த வார்த்தைகளை எழுதுகிறார்:

> *ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்; அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.*

ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தையே, புதிய பிறப்பை உண்டாக்கும் வித்து என்பதை இப்பகுதியில் நாம் காண்கிறோம். விசுவாசத்தினால் நாம் இந்த வார்த்தையை நம்முடைய இருதயத்தில் பெற்றுக்கொள்ளும் போது, பரிசுத்த ஆவியான வரின் கிரியையின் மூலம், அதிலிருந்து ஜீவன் புறப்படுகிறது. இந்த ஜீவன் முற்றிலும் புது வகையானது - தேவனிடமிருந்து தொடர்ச்சியாக உண்டாகும் ஒன்று. இவ்வாழ்க்கையை நாம் மதத்தின் மூலமாகவோ, நற்கிரியைகளின் மூலமாகவோ, நம்முடைய சுய முயற்சிகளினாலேயோ அனுபவிக்க முடியாது. தேவனிடத்திலிருந்து மட்டும் புறப்படும் ஜீவன் இது.

இக்கருத்தை நாம் விதைகள் கிரியை செய்யும் செயல் தொடரோடு இணைத்து காணலாம். இந்த பிரபஞ்சம் முழுவதிலும், வித்து மற்றும் ஜீவனை குறித்த ஒரு சட்டம் இருக்கிறது. இந்த சட்டத்தை இப்படியாக நாம் சொல்லலாம்: வித்தின் தன்மை அதிலிருந்து உருவாகும் ஜீவனின் தன்மையை தீர்மானிக்கிறது. வித்து மரிக்கக்கூடியதும், அழியக்கூடியதுமாக இருந்தால், அதிலிருந்து வரும் ஜீவனும் மரிக்கக்கூடியதும், அழியக்கூடியதுமாக இருக்கிறது.

ஆனால், தேவனுடைய வார்த்தையின் வித்து, அழியாததென்று நாம் அறிந்திருக்கிறோம். அது தெய்வீகமானது, நித்தியமானது, அழியாதது மற்றும் கெட்டுப்போகாதது. ஆகவே, அந்த வித்திலிருந்து நமக்குள் வரும் புதிய ஜீவனும், வித்திலிருக்கும் ஜீவனுக்கு ஒப்பானது. அது தெய்வீகமானது, நித்தியமானது, அழியாதது மற்றும் கெட்டுப்போகாதது. அப்படிப்பட்ட ஜீவனை தான் நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஆனால், தேவனுடைய வார்த்தையின் வித்தை நீங்கள் விசுவாசத்தினால் பெற்றுக்கொள்ளும்போது தான் அது உண்டாகும்.



ஒரு புதிய தன்மை

இப்பகுதியில், தேவனுடைய வார்த்தையென்னும் வித்து, நமக்குள் எவ்விதமான ஜீவனை உண்டாக்கும் என்பதை குறித்து நான் இன்னும் பேச விரும்புகிறேன். 1 யோவான் 3:8-9ல், யோவான் எழுதுகிறார்:

> *பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்; (மிக தெளிவான மொழி, அல்லவா? பாவத்தை பயிற்றுவிக்கிற யாவரும் - அல்லது தொடர்ந்து பாவத்தை செய்கிறவன் - பிசாசினால் உண்டானவன். அதற்கு பின்பு இயேசு ஏன் வந்தார் என்பதை யோவான் நமக்கு அறிவிக்கிறார்). பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். (இங்கு முக்கியமாக குறிப்பிடப்படும் கிரியை பாவம் தான். நம்முடைய வாழ்வில் இருக்கும் பாவ பிரச்சனையை எதிர்கொள்ளவே இயேசு வந்தார். புதிய பிறப்பின் விளைவை குறித்து அடுத்த வசனத்தில் யோவான் பேசுகிறார்) தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து (தேவனுடைய வித்து) அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்.*

"பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்;

பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்."

- 1 யோவான் 3:8–9

இது மிகவும் கடினமான மொழி - யோவான் என்ன சொல்லுகிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மறுபிறப்பு அடைந்த கிறிஸ்தவன் பாவமே இனி செய்ய மாட்டான் என்ற அர்த்தத்தில் யோவான் இங்கு பேசவில்லை என்பது எனது தனிப்பட்ட கருத்து. மறுபிறப்பு அடைந்த கிறிஸ்தவனாக இருக்கும் நான் கூட, வருத்தத்துடன் கூற வேண்டிய காரியம் என்னவென்றால், மறுபிறப்பு அடைந்த பின்னும் நானும் அவ்வபொழுது பாவம் செய்திருக்கிறேன். தொடர்ச்சியாகவும் அல்ல, வேண்டுமென்றே அல்ல - ஆனால் நான் பாவம் செய்திருக்கிறேன். ஆனாலும், நான் மறுபிறப்பு அடைந்து விட்டேன் என்பதை அறிந்திருக்கிறேன்.

இந்த வசனத்தில், தேவனுடைய வார்த்தையின் வித்திலிருந்து வரும் புதிய தன்மையை குறித்து யோவான் பேசுகிறார். நாம் முன்பு ஆராய்ந்த சட்டம் உங்களுக்கு நினைவிருக்கிறதா? நாம் உலகளாவிய சட்டத்தை கவனித்தோம்: "வித்து எப்படியோ, ஜீவனும் அப்படியே - அதிலிருந்து உண்டாகும் அதின் தன்மை." வித்து, தெய்வீகமானதாயும், நித்தியமான தாயும், அழியாததாயும், கெட்டுப்போகாததாயும் இருக்கும் போது, அதிலிருந்து உண்டாகும் ஜீவனும், அதின் தன்மையும் அப்படியே இருக்கும்.

புது பிறப்பின் நிமித்தம், நம் ஒவ்வொருவருக்குள்ளும், ஒரு புதிய ஜீவன், ஒரு புதிய தன்மை பிறக்கின்றது. இந்த ஜீவன், தேவனுடைய ஜீவனாகவே இருக்கிறது. அது தெய்வீகமானது, நித்தியமானது, அழியாதது. அது பாவம் செய்ய கூடாதது. அது ஏன் பாவம் செய்ய கூடாதது என்று யோவான் கூறும் காரணத்தை கவனித்தீர்களா? ஏனெனில் தேவனுடைய வித்து அதில் தங்கியிருக்கிறது. அதின் விளைவாக, அழியாத ஒரு வித்து - பரிசுத்தமான ஒரு வித்து - அழியக்கூடிய அல்லது பரிசுத்தமற்ற ஒன்றை ஒரு போதும் உருவாக்க முடியாது.

விசுவாசிகளாக நமது வாழ்வின் பாதை எப்படி தீர்மானிக்கப்படும்? இந்த புதிய தன்மை நமக்குள் இருந்து எவ்வளவு வெளிக்காட்டவும், வெளி வரவும் நாம் அனுமதிக்கின்றோமோ, அதையே சார்ந்திருக்கும். நாம் இனி பாவமே செய்ய மாட்டோம் என்ற உறுதி இல்லை. ஆனால், நமக்குள் இருக்கும் புதிய தன்மை, பாவமே செய்யாது என்பது தான் உண்மை. அந்த புதிய தன்மை

உங்கள் கவனத்திற்கு !!

உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட செய்திமடல் வருமானால் இமெயில் முகவரி *secretary@derekprince.in* அல்லது அலைபேசி *9585538202* தொடர்புகொண்டு எந்த பெயரில், விலாசத்தில் பல செய்தி மடல்கள் வருகிறது என்பதை தெரியப்படுத்தவும்.

உங்கள் விலாசம் மாறும்பொழுது தயவு செய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்

இன்னும் தேவையா ?

- ஆம், இந்த இலவச இதழில் எனக்கு இன்னும்------பிரதிகள் தேவை.
- தயவு செய்து அடுத்த முறை எனக்கு கூடுதல் பிரதிகள் அனுப்பவும்.
- முதல் முறையாக பெறுகிறேன், இனி தொடர்ந்து எனக்கு அனுப்பவும்

See over for address details...

பதிவு செய்க !

- தயவுசெய்து டெரிக் பிரின்ஸ் - இந்தியா ஊழியங்களைப் பற்றிய ஊழியத் தகவல்களையும், புதிய புத்தகம் / சி.டி விவரங்களையும் எனக்கு அனுப்பி வைக்கவும்.
- ஈமெயில் மூலமாக அனுப்பவும்.
- கடிதம் மூலமாக அனுப்பவும்

ISSUE #006



நமக்குள்ளிருந்து, தன் வழியில் நடத்த நாம் அனுமதித்தால் மட்டுமே நாம் பரிசுத்தமான வாழ்வு வாழ்வோம் என்ற நிச்சயம் நமக்கு உண்டு.

வார்த்தையைப் பெற்றுக்கொள்ளுதல்

இந்த செய்தியை நாம் முடிவுக்கு கொண்டுவர, இதை இன்னும் ஒரு படி மட்டும் நான் முன்னே கொண்டு போக விரும்புகிறேன். நாம் தேவனுடைய வார்த்தையைப் பெற்றுக்கொள்வதை குறித்து பேசினோம். ஆனால், வெளிப்படுத்தல் 19:13ல், இயேசு தாமே தேவனுடைய வார்த்தையென அழைக்கப்படுகிறார். ஆகவே, வார்த்தையை இரண்டு ரூபங்களில் நாம் பெறுகிறோம். முதலாவது, எழுதப்பட்ட அல்லது பேசப்பட்ட தேவனுடைய வார்த்தையை நாம் பெறுகிறோம் - இந்த செய்தியின் மூலமாக உங்களுக்கு வருகிற தேவனுடைய வார்த்தை. ஆனால், ஜீவனுள்ள, தனிப்பட்ட வார்த்தையாகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் இருக்கிறார்.

ஒரு விதத்தில், இவ்விரண்டும் ஒரே போன்றவை தான். வித்தின் ஒப்புமையிலிருந்து இதை இன்னும் நன்கு புரிந்துகொள்ளலாம். ஒரு கடைக்கு சென்று, விதைகளை வாங்குகிறீர்கள் என்று வைத்துக்கொள்ளலாம் - தர்பூசணி விதைகள் என்று வைத்துக்கொள்ளலாம். பாக்கெட்டில் இருக்கும் விதைகள் சிறியதாகவும், பழபழவென்றும், கடின மாகவும் இருக்கும். பார்ப்பதற்கு ஜீவனற்றும், அழகற்றதாகவும் இருக்கும். ஆனால், பாக்கெட்டின் வெளி பகுதியில், பாதியாக வெட்டப்பட்டிருக்கும் பழுத்த, அழகான தர்பூசணியின் படத்தை நீங்கள் காணலாம். அந்த சிவப்பு நிறமான, இனிமையான சதையை பார்த்தவுடன் உங்கள் வாயில் எச்சில் ஊற ஆரம்பித்து விடும். "அந்த சிறிய, பழபழப்பான, கடின மான விதைகளிலிருந்து இந்த கவர்ந்திழுக்கும் அருமையான கனி எப்படி வரும்?" என்று நீங்கள் கேட்கலாம். அது தான் விதையின் அற்புதம். இயற்கையில் நம்மை சுற்றிலும் இருக்கும் அற்புதம் இது.

> **"தேவனுடைய வார்த்தை நமக்குள் இருந்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஜீவனையும், தன்மையையும் கொண்டு வரும்."**

இது நமக்கு ஒரு ஒப்புமையுமாகும். தேவனுடைய வார்த்தையின் பிரசங்கத்தை நாம் பெற்றுக்கொள்ளும் போது, அது நமக்காக என்ன செய்கிறதென்ற ஒப்புமை இது. இப்படிப்பட்ட போதனை கடிதம் மூலமோ, எப்படியோ நமக்கு வார்த்தை அளிக்கப்படும் போது, அது அந்த சிறிய, கருப்பான, கடினமான விதையை போல் இருக்கிறது. அதற்கு மிகுந்த அழகோ, வல்லமையோ இருப்பதாக தோன்றுவதில்லை. ஆனால் அதை நம்முடைய இருதயத்தில் நாம் பெற்றுக்கொண்டால், நமக்குள் அழகான, பரிசுத்தமான மற்றும் நித்திய ஜீவனை அது பிறப்பிக்கும்.

ஒரு விதத்தில், பிரசங்கிக்கப்பட்ட தேவனுடைய வார்த்தையை நாம் பெற்றுக்கொள்ளும்போது, நமக்குள்ளிருந்து புறப்பட்டு வரும் ஜீவன், ஒரு பழுத்த தர்பூசணி, அந்த சிறிய கருப்பு விதையிலிருந்து வித்தியாசமாயிருக்கிறது போலவே இருக்கிறது. அந்த பழுத்த, ருசியான தர்பூசணியை போலவே, தேவனுடைய வார்த்தை நமக்குள் இருந்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஜீவனையும், தன்மையையும் கொண்டு வரும். தமது வார்த்தையை அனுப்புவதில், இதுவே தேவனுடைய நிறைவான நோக்கம். வார்த்தையென்னும் வித்தில் இருந்து, தேவன் நமக்குள் கிறிஸ்துவை உருவாக்க விரும்புகிறார்.

முடிவாக, இன்னொரு அற்புதமான சத்தியத்தை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்: நீங்களும் மறுபடியும் பிறக்க முடியும். தேவனுடைய வார்த்தையின் வித்தை நீங்கள் பெற்றுக்கொண்டால் - தேவனுடைய வார்த்தையின் வாக்குத்தத்தம், உங்களுக்குள் புதிய ஜீவனை புறப்பட செய்யும். யோவான் 1:12 இப்படியாக கூறுகிறது:

> *அவருடைய நாமத்தின்மேல் விசுவாச முள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.*

அவரைப் பெற்றுக்கொள்ளும் யாவரும், தேவனால் உண்டான வர்கள் என்று யோவான் தொடர்ந்து சொல்லுகிறார். நீங்களும் தேவனால் உண்டானவர்களாக இருக்க முடியும் - மறுபடியும் பிறந்தவர்கள். உங்கள் இருதயத்தைத் திறந்து இயேசுவை ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் பாவங்களை அறிக்கை செய்து, உங்களை மன்னிக்கும் படி கேளுங்கள். விசுவாசத்தினால், அவரை இருதயத்துக்குள் பெற்றுக்கொள்ளுங்கள். அப்படிச் செய்யும் போது, நீங்கள் மறு பிறப்பு அடைவீர்கள். என்ன ஒரு அருமையான சத்தியம்: நீங்கள் இந்த நொடியிலேயே மறுபடியும் பிறக்க முடியும்.

TAKEN FROM THE DEREK PRINCE LEGACY RADIO SERIES

"WHAT GOD'S WORD WILL DO FOR YOU." - Part 3 of 6

உங்கள் விபரம்

பெயர் ....

விலாசம்: ....

....

தொலைபேசி: .... பின்கோடு: ....

இமெயில்: ....

இந்த இதழ் முற்றிலும் இலவசமானது. ஆனால் செலவுகளை சந்திக்க நீங்கள் உதவலாம்.

நன்கொடை ₹

Derek Prince
Ministries - India

Contact us
www.derekprince.in
admin@derekprince.in
Ph 9585538205
1-C EVR Road,
3rd Floor,(Opp. Chinthamani Mall),
Puthur, Trichy - 620017

DEREK PRINCE MINISTRIES - INDIA

www.derekprince.in